**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : திருமதி.கா.பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03ஆம் நாள் திங்கள்கிழமை**

**அ.வ.எண்.309/2010**
**( TNDG07-000606-2010 )**

1. K.கந்தசாமி,
2. K.சுந்தர்ராஜன். --- வாதிகள்

எதிர்

1. K.காளியப்ப கவுண்டர் (இறப்பு)
2. K.பழனிச்சாமி,
3. K.ராஜேந்திரன்,
4. ரத்தினம். --- பிரதிவாதிகள்

(Plaintiffs and 2nd defendant are legal heirs of deceased D1 as per memo dated 21.02.2024)

இந்த வழக்கானது கடந்த 22.09.2010ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில், என் முன்பாக வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் K.கணேசன் அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் K.குமரேசன் அவர்கள் முன்னிலையாகியும், 3-ம் பிரதிவாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், 4-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P.மகேந்திரன் மற்றும் B.மனோகரன் ஆகியோர் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும் ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டும், தாவா பிராதை வாதிகள் தரப்பில் திருத்தம் செய்து, திருத்தல் பிராது தாக்கல் செய்ய வாதிகளுக்கு போதிய கால அவகாசம்

**வழங்கப்பட்டுள்ள நிலையில், இன்று வாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், வாதிகள் அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும் இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,**

**<u>தீர்ப்புரை</u>**

**தாவா சொத்துக்களில் வாதிகளுக்குரிய 2/4 பாகச் சொத்துக்களை, பிரதிவாதிகள் நலந்திகடு பார்த்து, கூட்டுச் சுவாதீனத்திலிருந்து பிரித்து வாதிகளுக்கு தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், தவறும்பட்சத்தில் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவாச் சொத்துக்களை நான்கு சம பாகங்களாகப் பிரித்து, அதில் இரண்டு பாகச் சொத்துக்களை வாதிகளுக்கு பிரித்துக்கொடுக்கும் வகையில் இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், தாவாச் சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகளோ, அவர்களது வகை ஆட்களோ வேறு மூன்றாம் நபர்களுக்கு கிரையம், ஒத்தி, ஈடு, குத்தகை போன்ற எவ்வித வில்லங்கங்களுக்கும் உட்படுத்தக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கும்படி கோரியும், தாவா செலவு தொகையை வாதிகளுக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் மற்றும் இவ்வழக்கின் தன்மைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப இதர பரிகாரங்கள் வழங்கும்படி கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**தாவா பிராதை வாதிகள் தரப்பில் திருத்தம் செய்து, திருத்தல் பிராது தாக்கல் செய்ய வேண்டிய நிலையில், இன்று வாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. வாதிகள் அழைக்கப்பட்டு ஆஜராகவில்லை. தாவா பிராதை திருத்தம் செய்து, திருத்தல் பிராது தாக்கல் செய்வதற்கு வாதிகளுக்கு போதிய காலஅவகாசம்**

**வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கானது வாதிகளின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படுகிறது.**

**இந்த தீர்ப்புரை இன்று 03.03.2025ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.**

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.03.25 16:06:37 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**